## பத்திரிக்கை செய்தி

## வழக்கை சாதகமாக முடித்து தருவதாக கூறி லஞ்சம் பெற்ற சிறப்பு உதவி ஆய்வாளர் கைது

புகார்தாரர் திரு.வெள்ளைச்சாமி, தஞ்சாவூர் மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரரின் தந்தை தனது 4 ஆண் பிள்ளைகளுக்கு சொத்தை பாகப்பிரிவினை செய்து கொடுத்துள்ளார். 2021ம் ஆண்டு புகார்தாரரின் தந்தை காலமாகிவிட்டார். கடந்த 02.12.2022ம் தேதி தஞ்சாவூர் காவல் நிலையத்திலிருந்து சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.மகேந்திரன் என்பவர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு புகார்தாரரின் தாயார் மற்றும் அவரது சகோதரி இருவரும் புகார்தாரர் மற்றும் அவருடைய சகோதரர்கள் குடித்துவிட்டு புகார்தாரரின் தாயை அடித்துவிட்டதாக பெட்டிசன் கொடுத்து இருக்கிறார்கள் என கூறி, நீங்கள் அனைவரும் தமிழ் பல்கலைக்கழக காவல்நிலையத்திற்கு விசாரணைக்கு வரவேண்டும் என கூறியுள்ளார். உடனே புகார்தாரரும் அவருடைய அண்ணனும் அன்று மாலை மேற்படி காவல் நிலையத்திற்கு சென்று திரு.மகேந்திரன் அவர்களை சந்தித்தபோது உங்கள் அம்மா உங்கள மீதும் உங்க அண்ணன்கள் மற்றும் தம்பி மீதும் புகார் கொடுத்துள்ளார் என்று கூறினார். அதற்கு புகார்தாரர் நானும் என்னுடைய ஒரு சகோதரர் செந்தில்குமார் மட்டும் தான் ஊரில் இருப்பதாகவும், மற்றொரு சகோதரர் பூனேவில் வேலை பார்ப்பதாகவும், தன்னுடைய தம்பி சென்னையில் வேலை பார்ப்பதாகவும், தாங்கள் யாரும் தங்களுடைய தாயை தாக்கவில்லை எனவும் நீங்களே வந்து விசாரியுங்கள் என கூறியுள்ளார். உடனே திரு.மகேந்திரன் புகார்தாரரை அனுப்பிவிட்டார். பின்னர் 2 மணி நேரம் கழித்து புகார்தாரரை அலைபேசியில் தொடர்பு கொண்டு உங்க அம்மா கொடுத்த புகார் தொடர்பாக உங்கள் மீடீது FIR போடப்பட்டு உள்ளது என்றும் Non bailable case-ன்றதனால சனி ஞாயிறு பெயில் எடுக்க முடியாது அதனால் நீங்க இரண்டு நாளைக்கு வீட்டிற்கு போகாமல் வெளியில் தங்கி கொள்ளுங்கள், நான் வீட்டிற்கு வந்து பார்க்கும்போது நீங்கள் யாரும் வீட்டில் இருக்கக்கூடாது என்று சொன்னார். புகார்தாரரின் அண்ணன் EBயில் வேலை பார்பதால் வேலைக்கு பிரச்சனை வரும் என்று சொன்னதால் புகார்தாரர் பயந்து கொண்டிருந்தார். அதன் பின்னர் வேலைக்கு சென்று விட்டார். கடந்த 06.12.2022ந் தேதி காலை திரு.மகேந்திரன், SSI அவர்கள் புகார்தாரரை அலைபேசியில் தொடர்பு கொண்டு உங்கள் மீதான FIRஐ தவறாக தொடுக்கப்பட்ட வழக்கு MF (Mistake of Fact) என உங்களுக்கு சாதகமாக முடித்து தருவாதகவும் அதற்கு செலவாகும் என கூறியுள்ளார். பின் மீண்டும் 26.12.2022 அன்று திரு.மகேந்திரன், புகார்தாரரை தெடர்பு கொண்டு உங்கள் அம்மா SPகிட்ட கொடுத்த புகார் தொடர்பாக நீங்கள் DSP அலுவலகத்திற்கு வருமாறு கூறினார், உடனே புகார்தாரர் விசாரணைக்கு சென்று வந்துள்ளார். மறுநாள்

27.12.2022ந் தேதி இரவு திரு.மகேந்திரன் அவர்கள் அலைபேசியில் புகார்தாரரை தொடர்பு கொண்டு ரூ.20,000/- லஞ்சமாக தர வேண்டும் என்றும் பணத்தை ரெடி பண்ணிட்டு 28.12.2022 அன்று காலை 1000 மணிக்கு பேசுன்னு சொல்லிவிட்டு அலைபேசியை துண்டித்துள்ளார். பின் 28.12.2022 காலை அலைபேசியில் புகார்தாரரை தொடர்பு கொண்டு ராமநாதன் ரவுண்டானா அருகில் நேரில் வந்து பார்க்க சொல்லியுள்ளார். அவரை அங்கு நேரில் சென்று புகார்தாரர் சந்தித்தபோது மறுபடியும் FIR பற்றியும் உங்களை கைது செய்யாமல் இருக்கவும் வழக்கை MF (Mistake of Fact) என முடித்து கொடுப்பதற்காகவும் தான் கேட்ட ரூ.20,000/- லஞ்சமாக தரும்படி கூறியுள்ளார். அதற்கு புகார்தாரர் தன்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று கூறியுள்ளார். அதன்பின் திரு.மகேந்திரன் புகார்தாரரிடம் உனக்கும் உன்னுடைய அண்ணன்கள் மற்றும் தம்பி ஆக நான்கு பேருக்கும் தலா ரூ.2500/- வீதம் மொத்தம் ரூ.10000/- லஞ்சமாக கொடுக்கும்படி கூறியுள்ளார், அதற்கு தன்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்றும் கடன்தான் வாங்கணும் என்று கூறியுள்ளார். திரு.மகேந்திரன், சிறப்பு உதவி ஆய்வாளர் இன்று 30.12.2022 காலை புகார்தாரரை அலைபேசியில் தொடர்பு கொண்டு அன்று மதியம் தனக்கு ரூ.10000/- லஞ்சமாக கொடுத்துவிடும்படியும் உடனடியாக case-ஐ MF செய்து தருவதாகவும் கூறியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை தஞ்சாவூர் பிரிவில் புகார் மனு அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 30.12.2022 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.மகேந்திரன் புகார்தாரரிடமிருந்து லஞ்ச பணமான ரூ.10,000/- கேட்டு பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.